# Department of Tamil and Research Centre

## Curriculum for M.Phil Tamil

**(SF)**

**(w.e.f. from 2019-2020)**

**(Outcome Based Education adopted from 2019-2020 onwards)**

SINCE 1881

# The American College

**(An Autonomous InstitutionAffiliated to Madurai Kamaraj University)**

**(Re-accredited (2nd Cycle) by NAAC with Grade 'A' & CGPA of 3.46 on a 4 point scale)**

# Madurai

**Proposed Curriculum Plan for Research programmes**
**Tamil For the Academic year 2019-20**

| Semester | Code | Title | Hours | Credits | Marks |
|---|---|---|---|---|---|
| I | MPT 6607 | ஆய்வு நெறிமுறைகளும் ஆய்வுப் பயிற்சியும் | 6 | 6 | 120 |
| | MPT 6609 | தமிழ் இலக்கண - இலக்கியப் போக்குகள் | 6 | 6 | 120 |
| II | MPT 6608 | இயக்கங்களும் இலக்கியமும் | 6 | 6 | 120 |
| | MPT 6610 & MPT 6611 | ஆய்வேடு | - | 12 | 240 |

## Programme Specific Outcomes (PSOs) for Research Programmes

**நிறை நிலை (எம்.ஃ.பில்) கற்ற மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர் (கற்றலின் விளைவு):**

1. தமிழ்மொழியின் செவ்வியல் கூறுகளையும், இன்றைய தமிழின் நவீனக் கூறுகளையும் உருவ மற்றும் உள்ளடக்க நிலையில் - ஆராய்ச்சி முறையில் அணுகி, இரண்டிற்கும் உள்ள வேர்களையும் மொழிக்குள் இயங்கும் அறுபடாத மரபுத் தொடர்ச்சியையும் இனம்காணும் திறன் பெற்றிருப்பர்.

2. தமிழ் இலக்கணமும் இலக்கியமும் ஒன்றுடன் ஒன்று இயைந்து இருப்பதை இனங்கண்டும், அவை காலந்தோறும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழலால் தாக்கங்களுக்கு உள்ளாவதையும் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் அணுகும் திறன் பெற்றிருப்பர்.

3. தமிழ்மரபில் தோன்றிய கோட்பாடுகளையும், மேலைத் தேயத்துக் கோட்பாடுகளையும் பிரதியுடன் பொருத்தியும், விவாதித்தும் ஆய்வை அடுத்தக்கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்த்திச் செல்லுகிற திறனைப் பெற்றிருப்பர்.

4. ஆய்வு மனப்பான்மையுடன் படைப்பை அணுகும் திறத்தையும், தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தையும் கொண்டிருப்பதால், புதுமையான மெய்மைகளை வெளிக்கொணர்ந்து சிறந்த ஆய்வாளராகும் பேறு பெற்றிருப்பர்.

5. ஆய்வுக்குத் தொடர்பான தரவுகளையும், சான்றாதாரங்களையும் தொகுக்கவும் மற்றும் பகுக்கவும் அறிந்திருப்பதால், அவற்றின் மூலம் ஆய்வின் நோக்கத்தை நிறைவேற்றும் ஆய்வாளராகும் திறன் பெற்றிருப்பர்.

6. கண்டறிந்த ஆய்வின் மெய்மைகளைக் காலத்திற்கேற்பப் புதுமையாக்கிக் கொண்டு அவற்றின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கும், தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் பயன்படுத்துகிற திறன் பெற்றிருப்பர்.

7. தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும் திறன் மூலம் பேட்டி, நேர்காணல், வினாநிரல், பட்டியல் போன்றவற்றைத் தயாரித்து ஆய்வுக்கேற்ப அவற்றை வடிவமைக்கும் திறன் பெற்றிருப்பர்.

8. இலக்கண மற்றும் இலக்கிய மரபுகளின் வழியாகவும், பல்வேறு கோட்பாடுகளின் வழியாகவும் பெற்ற கருத்துக்களைக் கொண்டு, ஆய்வுக்கேற்ற, நேர்த்தியான கருதுகோளை வடிவமைக்கவும், சோதித்தறியவும், வரையறை செய்யவுமாகிய திறன் பெற்றிருப்பர்.

9. பலவிதப்பட்ட அணுகுமுறைகளை மற்றும் கோட்பாடுகளைக் கொண்டு, தமக்கான ஆய்வுச் சிக்கலை, உயிரோட்டமான ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்கிற திறன் பெற்றிருப்பர்.

10. ஆய்வுக்குரிய விதிமுறைகளைப் புரிந்து கொண்டு, ஆய்வு முடிவுகளை முன் வைத்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதவும், அவை தொடர்பாகப் பேசவும், விவாதிக்கவுமான திறன் பெற்றிருப்பர்.

******

## Mapping of Course Outcomes (COs) with

## Programme Specific Outcomes (PSOs)

| Courses | PSO 1 | PSO 2 | PSO 3 | PSO 4 | PSO 5 | PSO 6 | PSO 7 | PSO 8 | PSO 9 | PSO 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PGT 6607 | √ | √ | √ | √ | | | | √ | √ | √ |
| PGT 6609 | √ | | √ | √ | | | | | √ | √ |
| PGT 6608 | | | | √ | √ | √ | √ | √ | √ | √ |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PSO 1 | | √ | √ | √ | √ | | | √ | | √ |
| PSO 2 | | √ | √ | √ | | | √ | | √ | |
| PSO 3 | | | √ | √ | √ | | √ | | √ | |
| PSO 4 | √ | √ | | √ | √ | | √ | √ | | |
| PSO 5 | | √ | | √ | | | | √ | √ | √ |
| PSO 6 | | √ | √ | √ | √ | | | | | √ |
| PSO 7 | | √ | | | | √ | √ | | | |
| PSO 8 | √ | √ | | | √ | | | | √ | |
| PSO 9 | | | | √ | | | | √ | √ | √ |
| PSO 10 | √ | √ | | | √ | | √ | √ | √ | √ |

**MPT 6607 ஆய்வு நெறிமுறைகளும் ஆய்வுப் பயிற்சியும் 6Hrs/6Cr**

---

**நோக்கம்:**

ஆய்வு நெறிமுறைகள் பற்றிய அறிமுகத்தைப் பெறுவதோடு, தெரிவு செய்த தலைப்பில் ஆய்வேட்டினை உருவாக்குதல் இப்பாடத்தின் நோக்கங்களாக அமைகின்றன.

**கற்றலின் பயன்:**

1. ஆய்வைப் பற்றி வரையறுக்கவும் விவரிக்கவும் பேசவுமான திறன்களைப் பெற்றிருப்பர்.
2. ஆய்வு எது? ஏன், எப்படி? என்று அடையாளங்கண்டு ஆராயும் திறனைப் பெற்றிருப்பர்.
3. ஆய்வை எழுதுவதற்கான முறையைத் திட்டமிட்டு, முடிவு செய்து எழுதும் திறனைப் பெற்றிருப்பர்.
4. ஆய்வைப் பல்வேறு துறைகளோடு இணைத்து எழுதும் திறனைப் பெற்றிருப்பர்.
5. ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்த பின்னர், அதனைத் திட்டமிட்டு வடிவமைப்புச் செய்து, முழுமையாக எழுதும் திறனைப் பெற்றிருப்பர்.

**கூறு:1**

ஆய்வின் தேவையும் நோக்கமும்: ஆய்வு விளக்கம் - ஆய்வு நாகரிகம் - ஆய்வுக் கள அறிமுகம் - தமிழின் ஆய்வு மரபு - உரையாசிரியர்களின் ஆய்வு முறை - ஆய்வாளரின் பண்புகள்.

**கூறு:2**

ஆய்வேட்டின் அமைப்பு: ஆய்வு நோக்கில் நூலை வாசிக்கும் முறை - தலைப்புத் தெரிவு - கருதுகோள் - தகவல் சேகரிப்பு - கள ஆய்வு - தகவல் திரட்டல் - குறிப்பெடுத்தல் - அறிக்கை தயாரித்தல். - அடிக்குறிப்பு - மேற்கோளாட்சி - துணை நூற்பட்டியல் - பின்னிணைப்பு - படங்கள் அட்டவணைகள்.

**கூறு:3**

ஆய்வு அணுகுமுறைகள்: விளக்க முறை ஆய்வு - சமூகவியல் ஆய்வு - ஒப்பீட்டியல் ஆய்வு - வரலாற்று முறை ஆய்வு - அமைப்பியல் ஆய்வு - மொழியியல் ஆய்வு - உளவியல் ஆய்வு, பெண்ணிய, தலித்திய ஆய்வுகள், நவீனத்துவ, பின்நவீனத்துவ, பின்காலனிய ஆய்வு முறைகள் குறித்த விளக்கங்கள்.

**கூறு:4**

ஆய்வும் பிறதுறைகளும்: இலக்கியவியல் - நாட்டுப்புறவியல் - மானிடவியல்- தொல்லியல் முதலியன குறித்து விளக்குதல்.

**கூறு:5**

ஆய்வேட்டை உருவாக்குதல்: ஆய்வுக்கட்டுரை மற்றும் ஆய்வேடு எழுதப் பயிற்சி அளித்தல் - சிற்றிதழ்கள் சார்ந்த ஆய்வுமுறையியலை அறிமுகப்படுத்தி நிறுவனம்சார் ஆய்வுகளுடன் பொருத்திக்காட்டுதல்.

**பார்வை நூல்கள்:**

1. தமிழண்ணல், எம்.எஸ்.இலக்குமணன் - ஆய்வியல் அறிமுகம், பாரிநிலையம், சென்னை-18, பதினேழாம் பதிப்பு -2016.
2. பாலசுப்பிரமணியன், கு. வெ. *ஆய்வியல் நெறிகள்*, அணுராத பப்ளிக்கேசன், கும்பகோணம், 2015.
3. முத்துச்சண்முகன், சு. வேங்கடராமன். இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள். நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

**பார்வை நூல்கள்:**

1. ஞானசம்பந்தன், அ. ச. *இலக்கியக் கலை*, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 1993.
2. தமிழண்ணல். *தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் - பாகம் - 1.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை: 2004.
3. திட்டக் குழு. *தமிழ் நடைக் கையேடு.* அடையாளம் புத்தாநத்தம்: 2013.
4. ________________. *தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் - பாகம் - 2.* செல்லப்பா பதிப்பகம், மதுரை: 2012.
5. நடராசன், தி. சு. *திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும்*, NCBH, சென்னை: 2016.
6. நாராயணன், க. *ஆய்வு எது? ஏன்? எப்படி?* மாரிப் பதிப்பகம். புதுச்சேரி: 2008.
7. நு.ஃமான், எம். ஏ. *திறனாய்வுக் கட்டுரைகள்*, அன்னம் வெளியீடு, சிவகங்கை: 1985.
8. ________________. *மொழியும் இலக்கியமும்*, காலச்சுவடு, சென்னை: 2006.

9. பொற்கோ, *ஆராய்ச்சி நெறிமுறைகள்.* ஐந்திணைப் பதிப்பகம், சென்னை: 2012.
10. ரகுநாதன், தொ. மு. சி. *இலக்கிய விமரிசனம்*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை: 1980.
11. Barry, Peter. *Beginning Theory: An introduction to literary and cultural theory*, Third edition, Manchester University Press, Manchester and New York: 2009
12. Dobie, Ann B. *Theory into Practice: An introduction to literary criticism*, Wadsworth, USA: 2012.
13. Loomba, Ania. *Colonialism/Postcolonialism*, Second edition, Routledge, London and New York: 2005.
14. McLeod, John. *Beginning Postcolonialism*, Manchester University Press, Manchester and New York: 2000.
15. Tapan Basu et.al. *Listen to the flames: Texts and Readings from the Margins*. Oxford University Press. 2016.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | **3** | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 4

**MPT 6609 தமிழ் இலக்கண - இலக்கியப் போக்குகள் 6Hrs/6Cr**

---

**நோக்கம்:**

காலந்தோறும் தமிழ் இலக்கண - இலக்கியங்கள் உருவ, உள்ளடக்க நிலையில் அடைந்த மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள் முதலியன பற்றி அறிமுகம் பெறுதலும், இவற்றினூடேயுள்ள ஆய்விற்குரிய தளங்களை உற்றுநோக்கி அறிந்துகொள்ளுதலும் இப்பாடத்தின் நோக்கங்களாக அமைவுபெறுகின்றன.

**கற்றலின் பயன் :**

1. தொல்காப்பியத்தின் தாக்கம் நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பிற்கால இலக்கண நூல்களில் தொழிற்பட்டுள்ளமையை இனங்கண்டு, பொருத்திப் பார்க்கும் திறன் பெற்றிருப்பர்.

2. தொல்காப்பியம் உருவாக்கியுள்ள அகம் மற்றும் புறக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதோடு, அது காலந்தோறும் செலுத்தி வருகிற செல்வாக்கைப் பற்றி ஆய்வு நோக்குடன் வெளிப்படுத்துகின்ற திறனைப் பெற்றிருப்பர்.

3. காலந்தோறும் எழுந்த காப்பியங்கள், பக்தியிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியனவற்றைப் பற்றிப் புரிந்து கொள்வதோடு, அவற்றை வகைப்படுத்துகிற திறனையும் பெற்றிருப்பர்.

4. இலக்கண - இலக்கிய உரையாசிரியர்களிடையே உள்ள கருத்தியல் சார்ந்த, பிரதிசார்ந்த வேறுபாடுகள் பற்றி விவாதிக்கும் திறனைப் பெற்றிருப்பர்.

5. மரபுக் கவிதையிலிருந்து நவீனக் கவிதை, உரைநடை ஆகியனவற்றைப் பிரித்துப் பார்க்கின்ற திறனையும் சுயமாக இவற்றைப் பற்றித் திறனாய்ந்து எழுதும் திறனையும் பெற்றிருப்பர்.

**கூறு:1**

தொல்காப்பிய இலக்கண அமைப்பு - தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த நன்னூல் - நம்பியகப்பொருள் - புறப்பொருள் வெண்பா மாலை - யாப்பருங்கலக ்காரிகை - தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களை இனங்காட்டுதல்.

**கூறு:2**

தொல்காப்பரின் அக, புறக் கொள்கைகள் - சங்க இலக்கியங்களில் அகப், புற கருத்துகள் மையமாகும் நிலை - சங்க மருவிய கால இலக்கியங்கள் - காப்பியங்கள்-பக்தி இலக்கியங்கள் - சிற்றிலக்கியங்கள் - தற்கால இலக்கியங்கள் வரைக்கும் அதன் தாக்கத்தை விளக்குதல்.

**கூறு:3**

அற இலக்கியத் தோற்றம் - காப்பிய இலக்கிய வடிவம் - காப்பியத்தில் மையமாகும் சமண, பௌத்தக் கருத்தியல் - பக்தி இலக்கியத் தோற்றம் எழுச்சி - வைதீகக் கருத்தியல் - சிற்றிலக்கியங்களின் தோற்றம் - உருவ, உள்ளடக்க மாற்றத்தைச் சுட்டிக்காட்டுதல்.

**கூறு:4**

உரைமரபு - உரையாசிரியர்களின் காலச்சூழல் - தொல்காப்பியம் முதல் சிற்றிலக்கியக் காலம் வரைக்குமான உரையாசிரியர்களின் பங்களிப்பு உரையாசிரியர்களின் பிரதி சார்ந்த வேறுபாட்டை விளக்கிக் கூறுதல்.

**கூறு:5**

ஐரோப்பியர் வருகை - மரபிலக்கிய மாற்றச் சூழல் - கவிதை இலக்கியம்: மரபுக்கவிதை - வசன கவிதை - புதுக்கவிதை - நவீன கவிதை; உரைநடை இலக்கியம்: சிறுகதை-நாவல் - நாடகம் ஆகிய இலக்கியங்களின் நுட்பங்களை உணர்த்துதல்.

## பார்வை நூல்கள்:


1. வ.சுப. மாணிக்கம் - தமிழ்க் காதல், சாரதா பதிப்பகம், சென்னை, 2007.
2. க.ப. அறவாணன் - அற்றை நாட் காதலும் வீரமும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2000.
3. மு.இராகவையங்கார் - தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சியுரை. செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1966.
4. தே.ஆண்டியப்பன் - தொல்காப்பியம்,பொருளதிகாரம், பரணி வெளியீடு, மதுரை, 2000.
5. கு.வெ.பாலசுப்பிரமணியன் - சங்க இலக்கியத்தில் சமூக சமூக அமைப்புக்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994.
6. க.சுப்பிரமணியன் - சங்க காலச் சமூகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1996.
7. க.கைலாசபதி - தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் பதிப்பகம், சென்னை, 2006.
8. ஆ.வேலுப்பிள்ளை - தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரிப் புத்தகப் பண்ணை, சென்னை, 1985.
9. கா.சிவத்தம்பி - பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் பதிப்பகம், சென்னை.2004.
10. கா.சிவத்தம்பி - பண்டைத் தமிழ்ச் சமூகம்வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெயீடு, 2003.

11. கைலாசபதி - பண்டைத்தமிழர் வாழ்வும்வழிபாடும், குமரன் பதிப்பகம், சென்னை.
12. மு.அருணாச்சலம் பிள்ளை - இலக்கிய வரலாறு, பார்க்கர் பதிப்பகம், சென்னை,
13. தொ.மு.சி ரகுநாதன் - இளங்கோவடிகள் யார்?
14. தெ.பொ.மீனாட்சி சுந்தரம் - குடிமக்கள் காப்பியம், பாவைப் பப்ளிக்கேஷன்ஸ், சென்னை, 2010.
15. ராஜ்கெளதமன் - அறம் அதிகாரம், விடியல் பதிப்பகம், கோவை, 2008.
16. வையாபுரிப்பிளை - தமிழிலக்கிய சரிதத்தில் காவிய காலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு -1966.
17. மு..அரவிந்தன் - உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
18. வி.செல்வநாயகம் - உரை நடை வரலாறு, குமரன் பதிப்பகம், சென்னை. 2000.
19. ந.வி.செயராமன் - சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு-1979.
20. கோ.கேசவன் - பள்ளு இலக்கியம்-ஒரு பார்வை, அன்னம் பதிப்பகம், சிவகங்கை, 1981.
21. நிர்மலா மோகன் - குறவஞ்சி இலக்கியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-01,
22. ம.பெ.சீனிவாசன் - வைணஇலக்கிய வகைகள், தேவகி பதிப்பகம், சிவகங்கை, 1994.
23. கா.கைலாசபதி - தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பதிப்பகம், சென்னை, 1997.
24. சிட்டி,சிவபாதசுந்தரம் - தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறிஸ்துவ இலக்கியச் சங்கம், (CLS) சென்னை, முதற்பதிப்பு-1977.
25. சிட்டி,சிவபாதசுந்தரம் - தமிழில் சிறுகதை: வரலாறுமும் வளர்ச்சியும், க்ரியா பதிப்பகம், முதற்பதிப்பு -1989.
26. கா.சிவத்தம்பி - தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
27. சி.சு.செல்லப்பா - தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது
28. கா. சிவத்தம்பி - நாவலும் வாழ்க்கையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

29. ஜெயமோகன் - நாவல் இலக்கியம், மடல் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -1995.
30. பாலா - புதுக்கவிதை -ஒரு பார்வை, அகரம், கும்பகோணம், மூன்றாம் பதிப்பு -1999.
31. வல்லிக்கண்ணன் - புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம், கும்பகோணம், 1991.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | **3** | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 4

**MPT 6608** **இயக்கங்களும் இலக்கியமும்** **6Hrs/6Cr**

---

**நோக்கம்:**

இலக்கியங்களில் மையமாகும் சிந்தனைப் போக்கைக் கோட்பாடாக வாசித்துப் புரிந்து கொள்ளுதலும், தமிழ்ச் சமூகம், அரசியல், சமயம், பண்பாடு சார்ந்த காரணிகளின் வழியாக உருப்பெற்ற இயக்கங்களானவை, இலக்கியங்களைப் பாதித்த முறையினை விளங்கிக் கொள்ளுவதும் இப்பாடத்தின் நோக்கங்களாகும்.

**கற்றலின் பயன் :**

1. சங்க, சங்க மருவிய இலக்கியங்களுக்குள் இருக்கும் கோட்பாடுகளை அடையாளம் காணும் திறன் பெற்றிருப்பர்.
2. காப்பிய, பக்தி இலக்கியங்களிலும் சமண, பௌத்த, இஸ்லாம், கிறித்துவம் போன்ற சமயத் தத்துவங்களிலும் உள்ள மனித மதிப்பீடுகளை அறிந்து கொள்ளும் திறனைப் பெற்றிருப்பர்.
3. கவிதை இலக்கியத்தைப் பல்வேறு கோட்பாட்டின் பின்னணியில் வாசிக்கும் திறன் பெற்றிருப்பர்.
4. தமிழ்ப் புனைகதை இலக்கியங்களை நவீனக் கோட்பாடுகளுடன் இணைத்து வாசிக்கும் திறனைப் பெற்றிருப்பர்.
5. தமிழ்ச் சமூகத்திற்குள் அரசியலோடு உருவான இயக்கங்களை அடையாளங்கண்டு அவற்றைக் குறித்து எழுதும் திறனைப் பெற்றிருப்பர்.

**கூறு:1**

சங்கச் செவ்விலக்கிய மரபு: செவ்வியல் கோட்பாடு-திணைக் கோட்பாடு - குறியீட்டியல் மற்றும் படிமவியல் கோட்பாடுகள்.

**கூறு:2**

தமிழில் காப்பிய, பக்தி இலக்கிய மரபு: சமணம் - பௌத்தம் - இஸ்லாம் - கிறிஸ்தவம் - அத்வைதம் - துவைதம் - விசிஷ்டாத்வைதம் - சைவம் - வைணவம் - ஆகிய தத்துவங்கள் மற்றும் சிந்தனைகளை இலக்கியங்களின் வழிப் பொருத்திப் புரிந்து கொள்ளுதல்.

**கூறு:3**

தமிழில் கவிதை மரபு : புனைவியல் - இயற்பண்பியல், நடப்பியல் - மிகை நடப்பியல் - இருத்தலியல் - முதலான சில கோட்பாடுகள் பயின்று வரும் முறையினை இனங்காட்டுதல்

**கூறு:4**

தமிழில் புனைகதை மரபு - நவீன, அதி நவீனக் கோட்பாடுகளின் வழி நவீன இலக்கியங்களை வாசித்தல் : அமைப்பியல், நவீனத்துவம், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், மாந்திரிக எதார்த்தவாதம் முதலான சில கோட்பாடுகள் மட்டும்.

**கூறு:5**

சமூக இயக்கங்களும் உரைநடையும் : மார்க்சியம் - காந்தியம் - திராவிட இயக்கம் -தனித்தமிழ் இயக்கம் - தலித்தியம் - பெண்ணியம் - அகதியம் - மூன்றாம் பாலினம் சார்ந்த சிந்தனைகளை முன்வைத்து அணுகுதல்.

**பார்வை நூல்கள்:**


| | | |
|---|---|---|
| 1.ந.பிச்ச முத்து | - | இலக்கிய இயக்கங்கள், சக்தி புத்தகநிலையம், சென்னை-5, மூன்றாம் பதிப்பு-2006. |
| 2.இ.எஸ்.டி.(தொ.ஆ) | - | இலக்கிய இசங்கள், அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு-1994. |
| 3.எஸ்.வி.ராஜதுரை | - | எக்சிஸ்டென்ஷியலிசம், க்ரியா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1975. |
| 4.ஞா.ஸ்டீபன்(தொ.ஆ) | - | பண்பாட்டு வேர்களைத் தேடி, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1999. |
| 5.எஸ்.இராமகிருஷ்ணன் | - | சமய வாழ்வில் வடக்கும் தெற்கும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012. |
| 6.கோ.கேசவன் | - | திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும், செல்மா பதிப்பகம், சிவகங்கை, மே-1991. |
| 7.ஞானி | - | மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், பரிமாணம் வெளியீடு, முதற்பதிப்பு-1988. |
| 8.ஆ.ஆனந்தராசன் | - | உலக மதங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை. |
| 9.ஜெயமோகன் | - | இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள், கிழக்குப் பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு-2009. |
| 10.தொ.பரமசிவன் | - | தெய்வங்களும் சமூக மரபுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ஏழாம்பதிப்பு-2010. |
| 11.க.சிவத்தம்பி | - | தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம்பதிப்பு-2011. |
| 12.ச.அகத்தியலிங்கம் | - | சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்-2012. |
| 13.ஆ.பூமிச்செல்வம் | - | பின்னை நவீனத்துவம், அகரம் பதிப்பகம், தஞ்சாவூர், 2009. |

14.ஞானி - தமிழர் வாழ்வியல்:தடமும் திசையும், காவ்யா பதிப்பகம், சென்னை, 2012.

14.மகாராசன்(தொ.ஆ) - அரவாணிகள்:உடலியல்-உளவியல்-வாழ்வியல், தோழமை பதிப்பகம், சென்னை,2007.

15.கெ.அய்யப்ப பணிக்கர் - இந்திய இலக்கியக் கோட்பாடுகள்:சூழல் பொருத்தம், பரிசல் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு-2012.

16.பி.சிதம்பரம் பிள்ளை - ஆலய பிரவேச உரிமை, சந்தியா பதிப்பகம், சென்னை, ஆகஸ்டு-2018.

17.பொ.வேல்சாமி - கோவில் -நிலம் -சாதி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு-2008.

18.துரை.சீனிச்சாமி - திணைக் கோட்பாடு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு-2012.

19.ந.இரத்தினக்குமார் - திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், கயல்கவின் பதிப்பகம், சென்னை-90, முதற்பதிப்பு மே-2016.

20.டி.தருமராஜ் - நான் ஏன் தலித்தும் அல்ல?, கிழக்குப் பதிப்பம், சென்னை-14, முதற்பதிப்பு, மே-2016.

21.ஜான் பெல்லாமி.ஃபாஸ்டர் - சூழலியல் புரட்சி, விடியல் பதிப்பகம், கோவை-15, முதற்பதிப்பு ஜீலை-2011.

22.சுப.வீரபாண்டியன் - திராவிடத்தால் எழுந்தோம், வானவில் புத்தகாலயம், சென்னை, 2012.

23.க.கைலாசபதி - இலக்கியமும் திறனாய்வும், குமரன் பதிப்பகம், சென்னை, 1999.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | **3** | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 4

**MPT 6610 & 6611** **ஆய்வேடு** **12 Cr**

---

ஆய்வாளர் தமக்கு விருப்பமான ஆய்வுத் தலைப்பை, ஆய்வு நெறியாளரின் வழிகாட்டிதலின் மூலம் தேர்வு செய்யலாம். ஆய்வுத் தலைப்பானது, ஆய்வுலகத்திற்குப் புதுமையான, குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைதல் வேண்டும்.

**ஆய்வேடு : அக மதிப்பீட்டுமுறை (மொத்த மதிப்பெண்கள் : 100)**

ஆய்வேடு அகமதிப்பீடு, புறமதிப்பீடு என இரண்டு பகுதிகளாக அமையும்

1. முதல் பருவத்தின் கடைசி வாரத்தில் ஆய்வின் முதற்கட்டச் செயல் முறை வடிவத்தை (ஆய்வுத் திட்டம்) எழுத்து வடிவத்தில் கொடுக்க வேண்டும். இதற்கு 20 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

2. ஆய்விற்கெனத் தேர்ந்துகொண்ட முதற்கட்டச் செயல் முறை வடிவத்தை ஆய்வுக் குழுவில் (துறைத்தலைவர், ஆய்வு நெறியாளர், துறைப் பேராசிரியர்கள்) விவாதித்துப் படைத்தல் வேண்டும். இதற்கு 20 மதிப்பெண் வழங்கப்படும். இது இரண்டாம் பருவத்தின் 4-ஆம் வாரத்தில் தரப்படுதல் வேண்டும்.

3. இரண்டாம் பருவத்தின் இறுதியில், முழுமையான ஆய்வேட்டை எழுத்து வடிவத்தில் ஆய்வுக் குழுவின் கலந்துரையாடலுக்குக் கொண்டு வருதல் வேண்டும். இதற்கு 60 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**ஆய்வேடு - புற மதிப்பீட்டு முறை: (மொத்த மதிப்பெண்கள் : 100)**

ஆய்வுக் காலத்தின் இறுதியில், புறத் தேர்வாளர் ஆய்வேட்டுக்கு 60 மதிப்பெண்ணில் மதிப்பீடு செய்ய, மீதமுள்ள 40 மதிப்பெண்கள் வாய்மொழித் தேர்வு நடைபெறும்.
ஆக, ஆய்வேடு 200 மதிப்பெண்களுக்கு மதிப்பீடு செய்யப்படும். அனைத்துத் தாட்களுக்கும் தேர்ச்சி விழுக்காடு 50 மதிப்பெண்கள் என்கிற வகையில் அமையும்.

**குறிப்பு** : முதல் மூன்று பாடத்தாள் தேர்வுகளுக்கான மதிப்பீட்டு விவரம்:

அகமதிப்பீடு, புறமதிப்பீடு என இரு பகுதிகளாக அமையும்

அக மதிப்பீட்டுத் தேர்வு மொத்த மதிப்பெண்கள் - 100

இரு தேர்வுகள் 2 x 30 - 60 மதிப்பெண்
பயிற்சிக் கட்டுரை எழுதுதல் - 20 மதிப்பெண்
கருத்தரங்கில் படைத்தல் - 20 மதிப்பெண்

புற மதிப்பீட்டுத் தேர்வு - 100 மதிப்பெண்கள்

*****